
உ
ஓம் குஹாயநம:
திருப்புகழமிர்தம்
(மாத வெளியீடு)
திருப்புகழ் தொண்டன்
ருபானந்த வாரி
முமிர்தம் காரியாலயம்,
காங்கேயநல்லூர்.
G DARAN'S ENGRAVE

## பொருளடக்கம்.


| | | | | |
|---|---|---|---|---|
| திருப்புகழ் | ஓலமறைகள் | ௱௨௫ | கற்பு | ௱௫௯ |
| அலங்காரம் | வெட்டுங்கடா | ௱௩௩ | எண்ணம் ஈடேற | ௱௪௩ |


# கந்த சஷ்டி நல்விழா.

மதுரை திருப்புகழ் சபையாரால் கீழ்க்கண்ட நிகழ்ச்சி முறைப்படி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெறும்.

**விரிவுரையாளர்: திருமுருக. கிருபானந்தவாரி அவர்கள்.**

தாரண ௵ ஐப்பசி ௴ 1-ம் நாள் செவ்வாய் (17-10-44)

**மாலை 5-35 மணிக்கு முருகன் திருவுருவம் சித்திரை வீதி ஊர்வலம். உயர் சைவத்திருவாளர் P. T. ராஜன் அவர்கள் Bar-at-law தலைமை வகிப்பார்கள்.**

முதற்படைவீடு—திருப்பரங்குன்றம்.
" உனைத்தினநதொழுதிலன " திருப்புகழ்.

தாரண ௵ ஐப்பசி ௴ 2-ம் நாள் புதன் (18-10-44)

**உயர்திரு A. S. P. ஐயர் அவர்கள் I. C. S. (ராமநாதபுரம் ஜில்லா நீதிபதி) தலைமையில்,**

இரண்டாவது படைவீடு—திருச்செந்தூர்.
" அந்தகன் வருந்தினம் " திருப்புகழ்.

தாரண ௵ ஐப்பசி ௴ 3-ம் நாள் வியாழன் (19-10-44)

**உயர்திரு. வள்ளல் V. V. C. R. முருகேச முதலியார் அவர்கள் தலைமையில்,**

மூன்றாவது படைவீடு—பழநி.
" நாதவிந்து கலாதி " திருப்புகழ்.

தாரண ௵ ஐப்பசி ௴ 4-ம் நாள் வெள்ளி (20-10-44)

**உயர்திரு. R. S. நாயுடு அவர்கள். Bar-at-law, (E. O. மீனாக்ஷி கோயில்) தலைமையில்,**

நான்காவது படைவீடு—சுவாமிமலை.
" ஒருவரையு மொருவர் " திருப்புகழ்.

தாரண ௵ ஐப்பசி ௴ 5-ம் நாள் சனி (21-10-44)

**உயர்திரு. K. M. S. லெக்ஷ்மணய்யர் அவர்கள், (டைரக்டர், மதுரை மில்ஸ்) தலைமையில்,**

ஐந்தாவது படைவீடு—குன்றுதோறாடல்.
" தாக்கமருக்கொரு " திருத்தணிகை திருப்புகழ்.

தாரண ௵ ஐப்பசி ௴ 6-ம் நாள் ஞாயிறு (22-10-44)

**உயர்திரு. Rao Bahadur S. S. N. லக்ஷ்மணன் செட்டியார் அவர்கள், (Prop. மகாலக்ஷ்மி மில்ஸ்) தலைமையில்,**

ஆறாவது படைவீடு—பழமுதிர்சோலை.
" சீர்சிறக்கு மேனி " திருப்புகழ்.

உ
ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் க. Vol 9. | தாரண ஹூ ஐப்பசி மீ 1உ அக்டோபர் 1944 | இதழ் எ. No 7.

## திருப்புகழ்.

### திருவாானைக்கா.

ஓல மறைக ளறைகின்ற வொன்றது
மேலை வெளியி லொளிரும் பரஞ்சுடர்
ஓது சரியை க்ரியையும் புணர்ந்தவ ரேவராலும்

ஓத வரிய துரியங் கடந்தது
போத அருவ சுருபம் ப்ரபஞ்சமும்
ஊனு முயிரு முழுதுங் கலந்தது சிவஞானம்

சால வுடைய தவர்கண்டு கொண்டது
மூல நிறைவு குறைவின்றி நின்றது
சாதி குலமு மிலதன்றி யன்பர்சொ னவியோமத்

சாரு மநுப வரமைந்த மைந்தமெய்
வீடு பரம சுகசிந்து இந்த்ரிய
தாப சபல மறவந்து நின்கழல் பெறுவேனோ

வால குமர குககந்த குன்றெறி
வேல மயில வெனவந்து கும்பிடு
வான விபுதர் பதியிந்த்ரன் வெந்துயர் களைவோனே

வாச களப வரதுங்க மங்கள
வீர கடக புயசிங்க சுந்தர
வாகை புனையும் ரணரங்க புங்கவ வயலூரா

ஞால முதல்வி யிமயம் பயந்தமின்
நீலி கவுரி பரைமங்கை குண்டலி
நாளு மினிய கனியெங்க ளம்பிகை த்ரிபுராயி

நாத வடிவி யகிலம் பரந்தவ
ளாலி னுதர முளபைங் கரும்புவெ
ளுவ லரசு மனைவஞ்சி தந்தருள் பெருமாளே.

## பதவுரை.

வால - இளமைப்பருவமுடையவரே! குமர - அஞ்ஞானத்தை யகற்றுபவரே! குக - குகையி லிருப்பவரே! கந்த - மூன்று வுலகங்களையும் பராக்கிரமத்தால் வற்றச்செய்பவரே! குன்று எறி வேல - கிரவுஞ்ச மலையைப் பிளந்த வேலாயுதரே! மயில - மயில் வாகனத்தையுடையவரே! என வந்து கும்பிடு - என்று சொல்லி துதித்துகொண்டுவந்து தொழுத, வான விபுதர் பதி இந்த்ரன் - விண்ணுலகின் தேவர்கள் தலைவனுகிய தேவேந்திரனுடைய, வெம் துயர் களைவோனே-வெப்பமாகிய துன்பத்தை நீக்கியவரே! வாச களப - வாசனை பொருந்திய சந்தனத்தையும், வர துங்க மங்கள - சிறந்த தூய்மையான மங்கலத்தையும், வீர கடக - வீரத்திற்கு அறிகுறியாகிய கடகத்தையும் அணிந்துள்ள, புய - புயாசலத்தையுடையவரே! சிங்க - சிங்கஏறு போன்றவரே! சுந்தர - அழகியவரே! வாகை புனையும் - வெற்றி மாலையைச் சூடிக்கொண்டுள்ள, ரண ரங்க புங்கவ - போர்த்தலத்தில் சிறந்த வீர சிகாமணியே! வயலூரா-வயலூரில் வாழ்பவரே! ஞால முதல்வி - உலகங்கட்குத் தலைவியும், இமயம் பயந்த மின் - இமவான்பெற்ற மின்னல்போன்ற ஒளியுடையவரும், நீலி - நீலநிறமுடையவரும், கவுரி - பொன்னிறமுடையவரும், பரை - பராசத்தியும், மங்கை - மங்கைப்பருவமுடையவரும், குண்டலி - குண்டலி சத்தியாக விளங்குபவரும், நாளும் இனிய கனி - என்றும் இனிய கனி போன்றவரும், எங்கள் அம்பிகை - எங்களுக்கு அருள்புரியும் தாயாரும், த்ரிபுர ஆயி - மூன்று உலகங்களையும் பெற்றவரும், நாத வடிவி - நாத வடிவாக விளங்குபவரும், அகிலம் பரந்தவள் - எங்கும் நிறைந்தவரும், ஆலின் உதரம் உள - ஆலிலை போன்ற வயிற்றையுடையவரும், பைங் கரும்பு - பசுமை தங்கிய கரும்பினுமினியவரும், வெண் நாவல் அரசு மனை - திரு

வானைக்காவில் வெண்ணாவல் மரத்தின் கீழ் எழுந்தருளியுள்ள சிவபெருமானுடைய மனைவியாரும், வஞ்சி - வஞ்சிக்கொடி போன்றவருமாகிய அகிலாண்ட நாயகியம்மையார், தந்து அருள் - பெற்றருளிய, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! ஓல மறைகள் அறைகின்ற ஒன்று அது - தேவரீருடைய திருவடியானது ஓலிடுகின்ற வேதங்களால் பேசப்படுகின்ற ஒப்பற்றது; மேலை வெளியில் ஒளிரும் பரம் சுடர் - பிரமரந்திரத்திற்கும் அப்பாலுள்ள மேலைப்பெருவெளியில் ஒளிர்கின்ற அருட்பெருஞ்ஜோதி; ஓது சரியை க்ரியையும் புணர்ந்தவர் எவராலும் - நூல்களிற் சொல்லுகின்ற சரியை கிரியை யோகம் என்ற மூன்று வழியையும் அநுசரித்தவர்களாகிய எவர்களாலும், ஓத அரிய துரியம் கடந்தது - சொல்லுதற்கரியதாகிய துரிய நிலையைக் கடந்து விளங்குவது, போத அருவ சுருபம் - உணர்வுமயமாகிய அருவம் உருவம் என்ற இரண்டு நிலையிலும், பிரபஞ்சமும் ஊனும் உயிரும் முழுதும் கலந்தது - உலகத்திலும் உடம்பிலும் உயிரிலும் ஆக எங்கும் எள்ளுக்குள் எண்ணெய்போல் கலந்திருப்பது; சிவஞானம் சாலவுடைய தவர் கண்டுகொண்டது - பதிஞானம் மிகவும் வாய்க்கப்பெற்ற தவசீலர்கள் கண்டுகொண்டது; மூலநிறைவு - அநாதியே நிறைவுடன் நிற்பது; குறைவு இன்றி நின்றது - குறைவு இன்றி நிலைத்து நின்றது; சாதி குலமும் இலது - சாதி குலம் ஆகிய வேறுபாடு இல்லாதது; அன்றி - இதுவேயுமன்றி, அன்பர் சொன்ன வியோமம் சாரும் - அன்பர்கள் அநுபவ பூர்வமாகக் கூறிய ஞானாகாசத்தைச்சார்ந்த, அநுபவர் அமைந்து அமைந்த மெய் - அநுபவ சீலர்கள் பொறிபுலன்கள் அவியப்பெற்று அடங்கிய அநுபவத்தில் காண்கின்ற உண்மைப் பொருளும், வீடு பரம சுக சிந்து - வீட்டின்பமும் பெரிய ஆனந்தக்கடலும் ஆக விளங்கும்; நின் கழல் - இத்தகைய மாற்றம் மனங்கழியநின்ற தேவரீருடைய திருவடிக் கமலங்களை, இந்த்ரிய தாப சபலம் அற வந்து - கன்மேந்திரிய ஞானேந்திரியங்களினால் வரும் தாபங்களும் சலனங்களும் அற நின் அருகில்வந்து, பெறுவேனோ - பெறமாட்டேனோ?

## பொழிப்புரை.

விண்ணுலகிற்குத் தலைவனாகிய தேவேந்திரன் சூரபன்மனால் துன்புற்றுச்சென்று, "வால! குமரா! குகா! கந்தா! குன்றெறிந்த கூர்வேலா! மயிலா!" என்று துதித்து வணங்க, அவனுடைய கொடிய துன்பத்தை அறவே அகற்றியவரே! நறுமணங் கமழுஞ் சந்தனமும்

சிறந்த தூய மங்கலமும் வீர கடகமும் அணிந்த திருப் புயங்களை யுடையவரே! சிங்கஏறு போன்றவரே! அழகியவரே! வெற்றிமாலையைப் புனைந்த யுத்த அரங் கத்திற் சிறந்தவரே! வயலூர் வாழும் வள்ளலே! உலகங் கட்கெல்லாம் தலைவியும், மலையரசன் பெற்ற மாதரசும், நீலநிறமுடையவரும், பொன்னிறம் பெற்றவரும், பரா சக்தியும், மங்கைப்பருவமுடையவரும், குண்டலி சக்தி யும், என்றும் இனிய கனி போன்றவரும், எங்கள் தாயா ரும், மூன்றுலகங்கட்கும் அன்னையும், நாதவடிவாக விளங்குபவரும், எங்கும் நீக்கமற நிறைந்தவரும், ஆலிலை போன்ற திருவுதரமுடையவரும், பசுமைதங்கிய கரும்பினு மினியவரும் திருவானைக்காவில் வெண்ணாவலின் கீழ் எழுந்தருளியுள்ள சிவபெருமானுடைய மனைவியாரும், வஞ்சிக்கொடியனையாருமாகிய உமாதேவியார் பெற் றருளிய பெருமிதமுடையவரே! ஓலமிடுகின்ற வேதங் களினால் ஓதப்படுகின்ற ஒரு பரம்பொருளும், பிரமரந்திரத் திற்கும் அப்பாற்பட்ட மேலைப்பெருவெளியில் ஒளிர் கின்ற அருட்பெருஞ்சுடரும்; நூல்களினாற் கூறப்படுகின்ற சரியை கிரியை யோகம் என்ற வழிகளை யநுசரிப்பவர்கள் யாவராலும் சொல்லுதற்கரியதாகிய துரியாதீதமானதும், உணர்வும் அருவும் உருவும் உலகும் ஊனும் உயிரும் முழுதும் (எள்ளுக்குள் எண்ணெய்போல்) கலந்திருப்பதும், பதிஞானம் மிகவும் உடைய தவசீலர்களாற் கண்டு கொள்ளப்பட்டதும், அநாதி மூலமாகி நிறைவாகி, குறை வொன்றுமின்றி நிற்பதும், சாதி குலம் ஆகிய வேறுபாடு இன்றி விளங்குவதும்; அன்பர்களால் சொல்லப்படுகின்ற ஞானாகாசத்தில் சாரும் அநுபவிகள் பொறிபுலன்கள் அடங்கிய அவ்வமைந்த நிலையில் காணப்படுகின்ற உண்மைப்பொருளும்; வீட்டின்பமாகிய மோனசுகமாகிய இன்பக்கடலுமாக விளங்கும் தேவரீருடைய திருவடியை, இந்திரிய துன்பங்கள் நீங்க வந்து அடியேன் பெற்று உய்வேனோ?

## விரிவுரை.

ஓலமறைகளறைகின்ற ஒன்றது :—

ஆயிரம் வேதங்களும் இறைவனது தன்மையை அறுதியிட்டு அறையும் ஆற்றலின்றி "ஓ" என்று ஓலமிடுகின்றன. அதனால் "ஓலமறைகள்" என்றனர். எனின் எவ்வாறு அறைகின்றது? என்பீரேல் "அல்லை" "அல்லை" என்னும் பொருளால் ஆரணங்கள் அறைகின்றது. மறைகளுக்கும் எட்டாத வான்பொருள் என்பதனை அடியிற்காணும் அமுதவாக்குகளாற் காண்க.

"பரஞ்சுடர் நெற்றியந்தலத்தே
தானுதித்தனன் மறைகளுங் கடந்ததோர் தலைவன்"
—கந்தபுராணம்.

"வேதக் காட்சிக்கும் உபநிடதத்துச்சியில் விரிந்த
போதக் காட்சிக்குங் காணலன்" —கந்தபுராணம்.

"மறை யாயிரங் களும்
குமரகுரு வென வலிய சேடனஞ்சவங் திடுவோனே"
—திருப்புகழ்.

பாங்குளநாம தெரிதுமெனத் துணிந்து கோடிப்
பழமறைகள் தனித்தனியே பாடிப்பாடி
ஈங்குளதென் றுங்குளதென் றேடி யோடி
இளைத்திளைத்துத் தொடர்ந்து தொடர்ந் தெட்டுந்தோறும்
வாங்குபர வெளிமுழுதும் நீண்டு நீண்டு
மறைந்துமறைந் தொளிக்கின்ற மணியே எங்குந்
தேங்கு பரமானந்த வெள்ளமேசச்
சிதானந்த அருட்சிவமே தேவதேவே.

பாயிரமா மறையனந்தம் அனந்தமின்னும்
பார்த் தளந்து காண்டுமெனப் பல்கால் மேவி
ஆயிரமாயிர முகங்க ளாலும் பன்னாள்
அளந்தளந்தோர் அணுத்துணையு மளவு காணா
தேயிரங்கி யழுது சிவ சிவ என் றேங்கித்
திரும்ப அருட் பரவெளிவாழ் சிவமே ஈன்ற
தாயிரங்கி வளர்ப்பதுபோல் எம்போல் வாரைத்
தண்ணருளால் வளர்த்தென்றுந் தாங்குந் தேவே.
—திருஅருட்பா

"ஒன்றது" என்றது அதைத்தவிர வேறு பொருளில்லை என்னும் "ஏகமேவ" என்ற சுருதி வாக்கியத்தை வற்புறுத்துகின்றது.

**மேலை வெளியில் ஒளிரும் பரஞ்சுடர் :—**

மூலாதாரம் முதல் ஆறுதாரங்கட்கும் அப்பாலுள்ள பிரமரந்திரமுங் கடந்த வெளியாகிய மேலைப்பெருவெளியில் விளங்குகின்ற அருட் பெருஞ்சோதி.

> "நாளுமதிவேக கால்கொண்டுதீமண்ட
> வாசியனலூடு போயொன்றி வானின்க
> ளுமமதிமீதி லூறுங் கலாஇன்ப அமுதூறல்
> நாடியதன்மீது போய்நின்ற ஆனந்த
> மேலை வெளியேறி நீயின்றி நானின்றி
> நாடியிலும் வேறு தானின்றி வாழ்கின்ற
> தொருநாளே"
> —திருப்புகழ்.

அந்த மேலைவெளியில் விளங்குஞ் சிவசுடருடன் கலந்தின்புறுதற்கு விழைதல் வேண்டும்.

**ஓதுசரியைக்ரியையும் புணர்ந்தவர்........துரியங்கடந்தது :—**

சரியை, கிரியை, யோகம் என்ற மூன்றும் ஞானத்தையடைவதற்குரிய சாதனங்கள். ஆதலினால் சரியையாதிகளினால் நேரே இறைவனை யடைய முடியாது. ஞானம் ஒன்றாலேயே அடையலாம்.

> "சரியை யாளர்க்கு மக் கிரியை யாளர்க்கு நற்
> சகல யோகர்க்கு மெட் டரிதாய
> —திருப்புகழ்.

(1) சரியை — புறத்தொழிலால் உருவத்திருமேனியை வழிபடுதல்.

(2) கிரியை — அகத்தொழில் புறத்தொழில் இரண்டாலும் அருவத்திருமேனியை வழிபடுதல்.

(3) யோகம் — அகத்தொழிலால் மட்டும் அருவத்திருமேனியை வழிபடுதல்.

(4) ஞானம் — அறிவுமாத்திரத்தால் உரு, அரு, உருவாரு என்ற மூன்றையுங் கடந்து அகண்டாகார ஜோதிமயமான திருமேனியை வழிபடுதல்.

சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதமாகிய அவத்தையுங் கடந்து நிற்பவர் இறைவர்.

உலகுயிரு முழுதுங் கலந்தது :—

இறைவன் யாண்டும் நீக்கமற நிறைந்தவன் :

"பேதமில் குழவிபோல்வான் பிரிவிலன் யாண்டு நின்ருன்" என்பது கந்தபுராணத் திருவாக்கு.

"இகபர மிரண்டினிலும் உயிரினுக்குயிராகி
எங்கு நிறைகின்ற பொருளே"
"எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங் கிருப்பதுநீ அன்றே பராபரமே"

—தாயுமானர்.

சாதி குலமுமிலது :—

இறைவனுக்கு சாதி, குலம், பேர், ஊர், குணம், குறி, செயல் ஆகிய யாவும் இல்லை.

ஊரிலான் குணங் குறியிலான் செயலிலா னுரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு
நேரிலான் உயிர்க் கடவுளா யென்னுளே நின்ருன்.

—கந்தபுராணம்.

வியோமஞ்சாருமநுபவர் :—

ஞானுகாயத்திற் கலந்து இன்புறுகின்ற அநுபவிகள். அவர்கள் பந்தத்தினின்றும் விடுபட்டு அதனை யடைவர்; விடு என்ற முதனிலை நீண்டு வீடு என்று வந்தது. விடுபடுவது வீடு. அவ்வீட்டின் தலைவனுகிய பதியொடு கலந்த ஆன்மா பரமசுகக் கடலில் முழுகி இடையருத இன்புறுகின்றது.

**வாலகுமர...............களைவோனே :—**

*சூரபன்மனால் பன்னெடுங்காலம் ஆற்றொணாக் கொடுமையுற்ற இந்திரன் எம்பெருமானுடைய சந்நிதிக்கு வந்து,*

*" வாலகுமர குக கந்த குன்றெறி*
*வேல மயில "*

*என்ற ஆறு மந்திரங்களைச் சொல்லிப் பரவிப் பணிந்தனன். அவனுடைய அல்லலை ஆறுமுகப் பெருங்கருணை அண்ணல் உடனே அகற்றி வைத்தனர். ஆதலினால் அன்பர்கள், மனத்துயர் உண்டானபோதெல்லாம் இந்த மந்திரத்தைக் கூறி தனக்குவமையில்லான் தாளை நினைத்து மனத்துயரை மாற்றிக்கொள்ளவும்.*

**ஞாலமுதல்வி...............**மணிவஞ்சி :—

*இந்த ஆறு வரிகளினால் உமாதேவியாருடைய ஒப்பறற் பெருமையை சுவாமிகள் உரைக்கின்றனர். திருவானைக்காவில் எழுந்தருளிய திருவேலிறைவனைப் பாடுகின்றனர்: அதனால் அங்கு சிறப்புடன் வீற்றிருக்கின்ற அகிலாண்ட நாயகியைத் துதிப்பாராயினர். இந்தச் சொற்றொடர்கள் எத்துணை யினிமையாக இருக்கின்ற தென்பதை அன்பர்கள் படித்துப் பார்க்கவும். நினைப்பார் நெஞ்சமும், வசனிப்பார் வாக்கும், கேட்பார் செவியும் ஒருங்கே தித்திக்குந் தெள்ளிய தீந்தமிழ்ச் சொற்களால் தொடுத்து இனிமையினும் இனிமையாகப் பாடிவைத்தருளினார்.*

## *கருத்துரை.*

இந்திரனுடைய இடர்களைந்த எம்பிரானே! வயலூர் மேவும் வள்ளலே! அகிலாண்டேச்வரியின் அருமைப் புதல்வரே! திரு ஆனைக்காவில் உறையுந் தேவரே! அடியேன் பொறிபுலன்களால் வருந் துன்பமற்று நின்கழலடைந்து பேரின்பப் பெருவாழ்வைப் பெறவேண்டும்.

ஓம் குமராய நம:

# கந்தரலங்காரம்

(௱கள-ம் பக்கத்தொடர்ச்சி.)

வெட்டுங் கடாமிசைத் தோன்றும்வெங்கூற்றன் விடுங் கயிற்றால்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டுங் கராசலங்கள்
எட்டுங் குலகிரி யெட்டும் விட் டோடவெட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்குங் கலாப மயூரத்தனே. (65)

பதவுரை.

*கரஅசலங்கள் எட்டும் - கையையுடைய மலைபோன்ற திக்கஜங்கள் எட்டும், குலகிரி எட்டும் - குலமலைகள் எட்டும், விட்டு ஓட - தத்தம் இடம் விட்டு விலகும்படி, எட்டாத வெளி மட்டும் - கண்களுக்கு எட்டாத ஆகாயம் வரைக்கும் மறையும்படி, விரிக்கும் கலாப - விரிக்கின்ற தோகையையுடைய, மயூரத்தனே - மயில்வாகனரே! வெட்டும் கடா மிசை தோன்றும் - வெட்டுகின்ற எருமைக்கடாவின்மீது வருகின்ற, வெம் கூற்றன் - வெம்மையாகிய இயமன், விடும் கயிற்றால் - வீசுகின்ற பாசக் கயிற்றினால், கட்டும் பொழுது - அடியேனைக் கட்டிப்பிடிக்கும் பொழுதில், விடுவிக்கவேண்டும் - தேவரீர் தோன்றி அக்கட்டினின்றும் விடுவித்துக் காப்பாற்றியருள வேண்டும்.*

விரிவுரை.

வெட்டுங்கடா :—

*கூற்றுவனுடைய வாகனம் எருமைக்கடா; கடா என்பது ஆண் எருமை; கூற்றுவனுடைய நிறம் கருமை; அவனுடைய வாகனமாகிய எருமையுங் கருமை; அநேக அமாவாசை யிருளைப் பிழிந்து அப் பிழியை உடம்பிற் பூசினாற்போன்ற கருமை, "காரிருட்பிழம்பு மெழுகிய அங்கமும்" என்றார் பிறிதோரிடத்தில். கண்டவரைக் கொம்பினாற் குத்தி வெட்டுங் கொடுமையுமுடைய எருமை யாதலினால் "வெட்டுங்கடா". இனி முருகப்பெருமா*

னுடைய அடியாரிடத்தில் வந்தால் அப் பெருமானுடைய சத்திவாளால் வெட்டுதற்குரிய கடா எனினும் பொருந்தும். இயமன் "பார்வையிற் கொளுந்தும் தழலுமிழ் கண்களும் காள மொத்த கொம்பும்உள" கடாவில் வந்து வெருட்டி உயிர்களைப் பற்றுவன்.

கூற்றன் விடுங்கயிற்றல் கட்டும்போழது :—

கூற்றன் - உடம்பை வேறு உயிரை வேருகப் பிரிப்பவன். காலாந்தரத்தில் வந்து பாசக் கயிற்றை வீசி உயிரை கட்டிப் பிடிப்பன். மாட்டை மூக்கணாங்கயிற்றல் அடக்கிப் பிடிப்பதுபோல், இயமன் பிராணவாயுவைப் பிடித்து ஈர்த்துக் கட்டிக்கொண்டு போவான்.

"காலனார் வெங் கொடுந் தூதர்பாசங்கொடெடன்
காலினூர் தந்துடன் கொடுபோக"

கால் - வாயு; பிராணவாயுவை பாசத்தால் ஈர்த்து உடம்பினின்றும் உயிரைப் பிரித்து, எட்டுத் தத்துவங்களோடு கூடிய புரியட்டக சரீரத்தைப் பிணித்து தன்னுலகிற்குக் கொண்டு செல்வான்.

விடுவிக்கவேண்டும் :—

"முருகா! மூவர்முதல்வா! முக்கண்ணன் புதல்வா! தேவரீருடைய திருவடிகளே அடைக்கலமாகப் புகுந்தேன். கொடுமையான கூற்றுவன் என்னிடம் நெருங்கிவந்து, என் பொறிகளும் புலன்களும் அறிவும் கலங்க, உரை குழற, விழிசுழல பாசக்கயிற்றல் கட்டியிழுக்குங்காலத்தில் தேவரீர் வந்து "அடா இயமனே! இவன் நமது அடியான்" என்று கூறி அடியேனை விடுவித்தருளவேண்டும்.

"அந்தகனுமெனை யடர்ந்து வருகையினில்
அஞ்ச லெனவலிய மயில்மேல்நீ
அந்த மறலியொ டுகந்த மனிதனம
தன்பனென மொழிய வருவாயே" —திருப்புகழ்.

"பைவருங் கேளும் பதியுங்கதறப் பழகிநிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய் விடும் போதுன்றன் அடைக்கலமே"
—அலங்காரம்.

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்ற னாருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண் டடியேன்
இந்த நாள்வந்து நமன்றமர் நலியின்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தை யால்வந்துன் றிருவடி யடைந்தேன்
செழும் பொழிற்றிருப் புன்கூ ருளானே —சுந்தரர்.

கராசலங்கள் எட்டும் :—

கராசலம் - யானை; கையையுடைய மலை. திக்குகளில் நின்று உலகைத் தாங்குபவைகளாகிய திக்கஜங்கள். அவையாவன:

ஐராவதம், அஞ்சனம், புண்டரீகம், புட்பதந்தம், வாமநம், சார்வ பௌமம், குமுதம், சுப்ரதீபம்.

குலகிரி எட்டும் :—

குல மலைகளாவன:

கைலை, நிடதம், இமயம், ஏமகூடம், மந்தரம், நீலகிரி, விந்தம், கந்தமாதனம்.

எட்டாதவெளிமட்டும் புதையவிரிக்குங் கலாபம் :—

எம்பெருமான் ஏறுகின்ற மயிலின் கலாபத்தின் விரிவு இதனால் வியந்து ஓதப்படுகின்றது.

எட்டாத வெளி-கட்புலனுக்குஎட்டாததாகிய அண்ட முகட்டுக்கு அப்பாலும் மறைய விரிக்குந் தோகை; எனின் அதன் விரிவு இத்தன்மைத்தென்று இயம்ப வல்லார் யாவர்?

சங்கார காலமென அரிபிரமர் வெருவுறச்
சகல லோகமு நடுங்கச்
சந்த்ர சூரியரொளித் திந்த்ராதி யமரரும்
சஞ்சலப் படவுமையுடன்
கங்காளர் தனிநாடகஞ் செய்த போதந்த
காரம் பிறந்திட நெடுங்
ககன கூடமுமேலை முகடுமூடிய பசுங்
கற்றைக் கலாப மயிலாம். —மயில்விருத்தம்.

# கற்பு.

## மாதரசி.

அவர்கள் வீட்டில் எப்போதும் "இருங்கள்" "சாப்பிடுங்கள்" "சிலநாள் தங்கியிருங்கள்" என்ற சொற்களே முழங்கிக்கொண்டிருந்தன. பலபேர் வருவதும் உண்பதும் உறங்குவதும் புறப்படுவதுமாகவே இருந்தனர். அவர்கள் வீட்டில் காய்களும் தானியங்களும் குன்றுகள்போல் குவிந்திருந்தன; அன்னமலையும் பாற்குடங்களும் குறைவற நிரம்பி அநேகருடைய பசியை யகற்றிக்கொண்டிருந்தன. இல்லை என்ற சொல் அங்கே ஒருவருடைய வாயிலிருந்தும் வந்ததேயில்லை. அவர்களுடைய வீட்டிற்கு முன்னாலே பல புலவர்கள் கூடி சதா அரிய பெரிய ஆராய்ச்சிகளையும் விரிவுரைகளையும் நிகழ்த்திக் கொண்டிருந்தனர்கள். நன்ருகத் தழைத்து ஓங்கி வளர்ந்து பூத்துக் காய்த்துப் பழுத்த மரத்தில் பறவைகள் கூடி வாழ்வது போல் அப்புண்ணிய சீலர்களின் திருமாளிகையிலும் பலர் பரி-

---

இத்தகைய சிறந்த மயிலை வாகனமாக வுடையவர் ஆதலினுல் எருமையை வாகனமாக வுடையவன் வரும் போது மயில்மீது வந்தருள்வாய் என்று குறிப்பிடுகின்ருர்.

"கார்மா மிசை காலன் வரிற் கலபத்
தேர்மா மிசை வந் தெதிரப்படுவாய்"

—அநுபூதி.

காலன் வரும்போது உரையும் உணர்வும் அற்று அவசமுற்றுக் கிடப்போமாதலின் காலன் வரும்போது வேலனை வருமாறு இப்பொழுதே விண்ணப்பங் கொடுத்துவிடவேண்டும். வெள்ளம் வருமுன் அணை போடுவதுபோல் என்றறிக. வேலனை வாரிபடுவார் காலனை யஞ்சார்.

### கருத்துரை.

சிறந்த - விரிந்த கலாப்மயில் வாகனரே! காலன் வந்து என்னைப் பாசத்தாற் கட்டும்போது விடுவித்தருளல் வேண்டும்.

வுடன் உண்டு உவந்திருந்தனர். அந்த வீட்டிற்குரியவராகிய மகாலிங்கம் என்பவருடைய மனம்போல் அவருடைய மனையவளாகிய மாதரசி மன்னுபுகழ் மங்கையாக விளங்கினாள். மாதரசியின் முகம் எப்போதும் செந்தாமரையைப்போல் மலர்ந்திருந்தது. புன்சிரிப்பாக வருகின்றவர்களை அழைப்பதும் சோம்பலின்றி உழைப்பதுமாக இருந்தாள். அதனால் மகாலிங்கத்தின் மனம் தழைப்பதும் ஏழைகள் பிழைப்பதுமாக இருந்தது. தருமதேவதை அங்கு தாண்டவமாடியது.

மாதரசி பேசும் ஒவ்வொரு சொல்லிலும் தேன் துளித்துச் சொட்டுவதுபோலிருக்கும். அவளுடைய முகம் முழுமதியைப் போல் குளிர்ந்திருக்கும். சந்திரனைச் சூழ்ந்து கருமேகம் கவ்வியதுபோல் கூந்தல் விளங்கும். முகத்தில் இலகும் பொட்டழகும் கட்டழகும் சொல்லற்பாலதன்று. வெற்பு எப்படி அசைவின்றி நிற்குமோ அப்படி அவள் கற்பும் அசைவின்றி நிற்கும். பதிபக்தியும் மதியுக்தியும் வாய்க்கப்பெற்றவள்.

மகாலிங்கம் மாதரசியுடன் மகிழ்ந்து சகல செல்வயோக மிக்க பெருவாழ்வில் வாழ்ந்தனன். வாழ்வும் தாழ்வும் ஒரு வழி நில்லா; செல்வஞ் சகடக்கால் போலவரும். திடீரென்று வியாபாரத்தில் பெருத்த நஷ்டம் அடைந்ததால் மகாலிங்கத்தின் குன்றனைய செல்வம் குன்றிவிட்டது. வறுமைப்பிணி வந்து சூழலுற்றது. வரவர பரிவாரங்களும் பணியாளர்களும் குறைந்தன; பஞ்சினும் மெல்லிய பாதமுடைய மாதரசி இப்போது தானே வீட்டுவேலைகள் அனைத்தும் சலிப்பின்றி செய்துவருகின்றனள்.

அந்த ஊரில் ஒருபெரிய பயில்வான் இருந்தான். அவன் மிகவும் முரடன். பாவபுண்ணியம் தெரியாத தடி; ஜீவகாருண்ய மில்லாத தியன்; பெண்டிரைக் கற்பழிக்கும் பேயன்; சுருங்கச் சொல்லின் அவன் செய்யாத கொடுமைகள் இல்லை. நல்ல அழகிய மங்கயரைக்கண்டால் அவர்களைத் தன் வசமாக்கும் பாவி. ஒருநாள் மாலை மாதரசி வீட்டிற்குமுன் தண்ணீர் தெளித்துக் கோலம் போட்டுக்கொண்டிருந்தனள். அப்பாவி அவ்வழியே சென்றவன் அவள் அழகில் மயங்கிவிட்டான். உடனே அவளையடைய எண்ணினான். பலர் வீதியில் போவதும் வருவதுமாக இருந்தபடியால் யாதொன்றும் அப்போது புரிவதற்கின்றி திகைத்து நின்றான். அம் முரட்டு மனிதன் தன்னை விடைத்துப் பார்ப்பதையறிந்த மாதரசி மனைக்குள்போய் மனங் கலங்கினாள்.

சிறிது நேரத்திற்குள் அப் பயில்வான் தன்னுடைய வேலைக்காரனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தனுப்பினான். அதையவன் கொணர்ந்து மாதரசியிடம் கொடுத்துநின்றான்.

"மாலே! நான் உன்னைக்கண்டதும் என் உள்ளம் உன்னிடம் பறிகொடுத்துவிட்டேன்; இனி நீ எனக்கு உரியவள்; இரவு 10-மணிக்கு வருவேன்; என்னை மறுக்கப்படாது. இல்லையேல் உன் கணவன் தலை போய்விடும"

இப்படிக்கு
வீரப்பப் பயில்வான்.

இக்கடிதத்தை மாதரசி படித்துப் பதறினாள். "பழநியப்பா! பரமகருணாநிதி! என்னே காலக்கொடுமை? ஆண்டவனே! என்னைக் கைநழுவ விட்டுவிடாதே; இந்த ஆபத்திலிருந்து எப்படி தப்புவேன். நான் ஏதாவது மறுத்துக் கூறினால் கணவன் உயிர் நிலைபெறாது. இல்லையேல் கற்பு நிலை பெறாது. பாவி இப்படி எத்தனை பேர் கற்பை யழித்தனனோ? கருணைக்கடலே! இவன் தொலைய வழிபண்ணமாட்டாயா?" என்று சிந்தித்தாள். அவள் மனதில் ஒரு யோசனை தோன்றியது. கடிதங் கொணர்ந்தவனைப் பார்த்து "சரி. இரவு 10 மணிக்கு அவர் குறித்தவண்ணம் வரச்சொல்" என்று கூறியனுப்பினாள். அவன் போய் சொல்ல பயில்வான் மகிழ்வெய்தினான். பொழுது போயிற்று.

மாதரசி தனது அந்தரங்கமான இருவரை யழைத்து "ஐயா! கூடத்தில் ஏதோ ஒரு புதையல் இருப்பதாகத் தெரிகின்றது. இங்கு தோண்டுங்கள்" என்றாள். 2 ஆள் ஆழம் ஒரு கிணறுபோல் தோண்டி மண்ணை ஒரு மூலையில் குவிக்கச் செய்தனள். பிறகு மாதரசி "சரி ஒன்றுமில்லை, நீங்கள் போங்கள்" என்று அவர்களுக்குச் சிறிது பணங்கொடுத்தனுப்பினாள். முள்களைப்போட்டு பூமிமட்டத்திலே மெல்லிய பாயை விரித்து அதன்மேல் நாற்காலியைப்போட்டு வைத்தனள். அதற்குள் அவளுடைய கணவன் வந்தான். மாதரசி கணவனைத் தொழுது ஒரு அறையில் இருத்தி கதவை மூடி "இப்போது வேடிக்கை யிருக்கின்றது பாருங்கள்" என்று பயில்வானுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். மணி 10 ஆயிற்று. பயில்வான் தன்னை நன்றாக அலங்கரித்துக்கொண்டு மாதரசியின் வீட்டில் நுழைந்தான். சுவர்க்கலோகத்தில் நுழைவதுபோல் நினைத்துக்கொண்டான். மட்டற்ற மகிழ்ச்சியினால் தன்னையே மறந்தான். மாதரசி வரவேற்று "வாருங்கள்; வாருங்கள்; தங்களைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்" என்று இனிமையாகக் கூறி அழைத்துக்கொண்டுபோய் கூடத்தில் ஏற்பாடு செய்துவைத்திருந்த நாற்காலியைக் காட்டி "இப்படி இரும்" என்றாள். பயில்வான் அந்த நாற்காலியில் அட்டகாசமாக உட்கார்ந்தான். உடனே பாய் முறிந்து குழியில் விழுந்தான்.

உடனே மாதரசி கணவனை யழைத்து இருவரும் அவசரம் அவசரமாக மணலைத் தள்ளி குழியைத் தூர்த்துவிட்டார்கள். பிறகு கணவனுக்கு நிகழ்ந்தவை யாவுங் கூறினாள். மகாலிங்கம் மனைவியினுடைய அதி நுட்பமான மதிநுட்பத்தைக் குறித்து மகிழ்ந்தான். "இனி இந்த ஊருக்கே நல்லகாலம். அக்கிரம சொரூபமான பாவி யழிந்தான்" என்றுகூறி அந்த இடத்தை முன்போல் அமைத்துவிட்டான்.

சில தினங்கள் கழிந்தன. ஒருநாள் மாதரசி மாலை அவ்வூர் சிவாலயம் போய் பெருமானை வழிபட்டுக்கொண்டிருந்தாள். அந்நகரை யரசாளும் அரசன் அம்மடமங்கையைக் கண்டான். அவன் மனம் மாறுபட்டது. மயங்கினான். அடுத்துள்ளவர்களால் அவளை இன்னாள் என்று அறிந்தான். அவளை எப்படியும் அடையவேண்டுமென்று எண்ணினான். அங்ஙனம் அவன் நினைத்து அதற்குரிய சதியாலோசனையைச் செய்துகொண்டிருந்தான். அதுசமயம் வானத்தில் மேகங்கூடி மழை பொழியத் தொடங்கிற்று. அதனால் கோயிலுக்கு வந்தவர்களும் மாதரசியும் தங்கள் தங்கள் இருக்கைக்குப் போகமுடியாமல் தடையேற்பட்டது. அரசன் தன் அந்தரங்கமான ஒருவன் மூலம் ஒரு வண்டியிலேற்றி வீட்டிற்கு ஓட்டுவதுபோல் அரண்மனைக்கு அவளை வஞ்சனையாகக் கொண்டுவருமாறு செய்தான். பிறகு மழை விட்டதா என்று மாதரசி எட்டிப்பார்த்தாள். அரசனுடைய சூழ்ச்சியின்படி ஒரு வண்டிக்காரன் "அம்மா! வீட்டிற்குத்தானே போகவேண்டும். ஏறுங்கள்; போகலாம்" என்றான். மாதரசி "அப்பா! என்ன வாடகை தரவேண்டும்?" என்றாள். அவன் "கொடுத்ததைப் பெற்றுக்கொள்ளுகிறேன்" என்று வண்டியிலேற்றிக்கொண்டு நேரே அரண்மனைக்கு ஓட்டினான். மழையும் இருட்டுமாக இருந்தபடியால் மாதரசிக்கு வண்டி போகும் வழியும் சதியும் தெரியவில்லை. அரண்மனை போனவுடன் திகைத்து நின்றாள். அதற்குள் ஒரு சேவகன் வந்து "அம்மா! உள்ளே வாருங்கள்; மழை நின்றவுடன் போகலாம்" என்றான். வேறு வழியின்றி உள்ளே நுழைந்தாள். சில தாதிகள் வந்து உபசரித்து ஒரு அறைக்குள் இருக்கச் செய்தனர். மாதரசியின் மனம் "படபட" என்று துடித்தது. மன்னன் மிக்க மகிழ்ச்சியுற்றவனாய் அவ்வறைக்குள் நுழைந்தான். மாதரசி பதறி ஒருபுறம் பயந்து நின்றனள். மன்னன், "பெண்மணியே! இன்றுமுதல் உனக்கு நற்காலம் பிறந்திருக்கின்றது. கவலைப் படாதே. என்னுடைய சேர்க்கையினாலே எல்லா செல்வங்களும் எளிதில் உனக்குக் கிடைக்கும்........" என்று ஏதேதோ உளறலானான்.

மாதரசி, "சீ! மதியற்ற பேதாய்! நீ ஒரு அரசனா? இது உனது நீதிக்கு அழகா? வேலி பயிரை மேய்ந்தால் வேறு பயிருக்கு ஆதரவேது? இரும்புத் தூணை செல்லரிக்குமா? வேண்டா. இந்த புன்மதியை விடு. நல்வழிப்படு" என்று வெகுண்டுரைத்தாள். உடனே மன்னன் சீறி "முடியுடை மன்னனாகிய என்னை மதியாமல் பேசுகின்றனையா?" என்று வாளை யுருவினான். பயந்து தன் வசப்படுவாள் என்று எண்ணினான். வாளைக் கண்டவுடனே மாதரசி பெண்சிங்கம்போல் மேலும் சினந்தாள்; சிரித்தாள்; "பேஷ், பெண்கொலைக்கும் துணிந்த பேதையே! உன் பொன்முடி என் கணவனுடைய கால் தூசுக்கும் இணையாகாது; வாள் என் உடம்பைத்தானே அழிக்கும்? என் கற்பை யழிக்கமுடியாதே?" என்றாள்.

ஊளையே யிடுநரி நேர் உன்முடியென் கணவனடித்
தூளையே நிகர்த்திடுமோ துன்மதிநீ நரகினுக்கு
நாளையே செலக்கடவாய் நழுவிடேன் கற்பு நெறி
வாளையேந் தியகையாய் மனமகிழ்வேன் மாய்த்திடுவாய்.

என்றாள். அவளுடைய அஞ்சாத நெஞ்சத்தின் திண்மையையும் கற்புநெறியின் உண்மையையும் மன்னன் கண்டு மருண்டான். அவன் உள்ளம் நடுங்கிற்று. வாளை உறையிலிட்டு, "சரி; இப்போது உன்னை விட்டுவிடுகிறேன். உன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு பின்னராவது உடன்படுவாயாக" என்று நீங்கினான். அவள் அந்த அறையில் ஒரு வேடனால் அடிபட்டு வீழ்ந்த பெண்மான்போல் வருந்திக்கொண்டிருந்தாள்.

நடுநிசி; எங்கும் ஒரே இருள். மழை ஓய்ந்து நிசப்தமாக நகரம் ஓய்ந்திருந்தது. வாசற் காவலனும் சுவர்மீது சற்று அயர்ந்து கண்மூடி சாய்ந்திருந்தான். அதுவே நல்ல சமயமென்று எண்ணி மாதரசி மெல்ல அரண்மனையிலிருந்து புலி கூண்டிலிருந்து வெளிப்பட்டதுபோல் வெளிப்பட்டாள். பயந்த உள்ளத்துடன் மிகவுந் துன்புற்று எப்படியோ ஒருவாறு தன் வீடுவந்துசேர்ந்து கணவன் கால்மேல் வீழ்ந்து கதறியழுதாள். மனைவியைக் காணாது கவலைக்கடலில் மூழ்கிக்கிடந்த மகாலிங்கம் தன் அருமைப் பத்தினியைக் கண்டு அளவற்ற மகிழ்ச்சி யுற்றான். அவளைத் தேற்றி யணைத்து ஆறுதல் புரிந்தான். மாதரசி நிகழ்ந்தவை யாவுங் கூறினாள்.

பின்னர், "கொடுங்கோல் மன்னன் வாழுநாட்டில் கடும்புலி வாழுங் காடு நன்றே" என்றபடி அறிவற்ற கொடிய அரசன் வாழும் ஊரில் இனி இருக்கப்படாதென்று, மகாலிங்கமும், மாதரசியும் முக்கியமான சாமான்களுடன் ஒரு வண்டி பிடித்து

அவ்வூரைவிட்டகன்று, பலகாதங்கள் கடந்து ஒரு பெரிய நகரத்தை யடைந்து அங்கு அரசன் அரண்மனைக்கருகில் ஒரு வீட்டை வாடகைக்கு அமைத்து அதில் தங்கினார்கள். மறுநாள் மாதரசியைத் துன்புறுத்திய மன்னன் மாண்டொழிந்தான்.

மாதரசி தன் மகிழ்நனுடன் குடும்பத்தை நடத்துவதற்கு வழியின்றி தன்மீதிருந்த ஆபரணங்களை விற்று கணவனைப் பேணிவந்தாள். ஒருநாள் அதிகாலை மகாலிங்கம் வீட்டிலிருந்து எழுந்து தெருவுக்கு வந்தான். அதுசமயம் எதிரில் அரண்மனையிலிருந்த அரசன் எழுந்து மேல்மாடியில் வீதியை எட்டிப் பார்த்தான். மகாலிங்கம் அவன் பார்வையில் பட்டான். அரசன் திரும்பியவுடன் ஜன்னலில் இடிபட்டு தலையில் சிறிது அடிபட்டது. அரசனுக்குக் கோபம் பிறந்தது. "இவனுடைய முகத்தில் முதலில் எழுந்தவுடன் விழித்தோம்; அதனால் தலையில் அடிபட்டது. இவன் உலகில் இருந்தால் இன்னும் பலர் இவன் முகத்தில் விழித்து நம்போல் துன்புறுவர். ஆதலால் இவனைக் கொன்றுவிடவேண்டும்" என்று எண்ணித் தீர்மானித்தான். சேவகனை யழைத்து, "அடே! தூங்கி யெழுந்ததும் இவன் முகத்தில் விழித்ததால் என் தலையில் அடிபட்டது: ஆதலால் இவனைக் கொலைக்களத்திற்குக் கொண்டுபோய் தலையை வெட்டிவிடுங்கள்" என்று கட்டளை யிட்டான்.

சேவகன் உடனே விரைவிற்போய் மகாலிங்கத்தைக் கையில் விலங்கிட்டு, அரசன் உத்தரவைக்கூறி கொலைக்களத்திற்கு இழுத்தான். மகாலிங்கம், "ஐயா! என்ன அநியாயம்? நான் ஒரு குற்றமுஞ் செய்யவில்லையே? நிரபராதியாகிய என்னை கொல்வது முறைமையா? அந்தோ! தெய்வமே! நியாயத்தை நிலைநாட்டுதற்குரிய நிருபனே இங்ஙனம் அநியாயத்தைச் செய்வானேல், என்போன்ற ஏழைகட்கு ஆதரவு யார்? "உன்னையொழிய ஒருவரையு நம்புகிலேன்; பின்னை யொருவரை யான் பின் செல்லேன்" முருகா! உன் திருவருள்போல் நடக்கட்டும்" என்று புலம்பினான்.

மாதரசி இவைகளைக்கேட்டு இடியேறுண்ட நாகம்போல் நடுங்கினாள். உள்ளம் பதைத்தாள். "ஐயோ! தெய்வமே! ஆயத்திற்குமேல் ஆபத்து வருகின்றதே? நாங்கள் என்ன பூர்வத்தைச் செய்தோமோ?" என்று கதறி யழுதாள்; அந்த சேவகன் கால்மேல் விழுந்து தொழுதாள்; "அண்ணா! எனக்கு மாங்கல்ய பிச்சைகொடு; என் கணவனைக் கொல்லாதே. இவர் ஒருவருக்கும் ஒரு கெடுதலுஞ் செய்யவில்லையே? ஏன் இவரைக் கொல்லத்துணிந்தீர்கள்?" என்றாள்.

சேவகன், "அம்மா! நான் என்ன செய்யமுடியும்? அரசனுடைய ஆணை. அரசன் நித்திரைசெய்து எழுந்தவுடன் உன் கணவனைப் பார்த்தாராம் அதனால் அவர் தலையில் அடிபட்டதாம். ஆதலால் இவர் முகத்தில் விழித்து இன்னும் எத்தனைபேர் துன்புறுவார்களோ? அதற்காக மரணதண்டனை விதித்திருக்கின்றார்" என்றான்.

மாதரசி மனத்தில் ஒரு எண்ணந் தோன்றியது. "சமயத்தில் அழுது பயனில்லை. அறிவைப் பயன்படுத்தவேண்டும்" என்று எண்ணி சேவகனைத் தொழுது, "அண்ணா! உனக்குக் கோடி நமஸ்காரம். சற்று நேரம் பொறும். நான்போய் அரசனிடத்தில் சில வார்த்தைகள் சொல்லிவிட்டு வருகின்றேன்" என்று கூறி உடனே அரண்மனைக்குள் நுழைந்தாள். அவளுடைய கட்டழகாலும் கல்லுங் கனியக் கண்ணீர் இரைத்து கலங்கி யழுவதாலும் காவலர்கள் தடைசெய்யவில்லை. நேரே சென்று அரசன் கால்மேல் வானத்திலிருந்து மேகத்துடன் மின்னல் விழுந்து புரள்வதுபோல் வீழ்ந்து புலம்பினாள். அரசன், "அம்மா! நீ யார்? உனக்கென்ன தீங்கு நேரிட்டது. சொல்" என்றான்.

மாதரசி, "நீதி தவறாத நிருபரேறே! கருணையே வடிவான கற்பகத்தருவே! தாங்கள் இன்று கண்விழித்து எழுந்தவுடன் என் கணவன் முகத்தில் விழித்தீர். அதனால் சிறிது தலையில் அடிபட்டது. அதன் காரணமாக அவரைப் பார்த்து இனி பலர்க்கும் அடிபடாமலிருக்கும்பொருட்டு தலையை வெட்டச்சொன்னீர். நியாயமே; இன்று என் கணவனும் தூங்கியெழுந்து வெளியில் வந்து தங்கள் முகத்தைத்தான் முதல் முதலாக விழித்தார். அதற்குப்பலன் மரணமானால், இனி தங்கள் முகத்தில் முதலாக விழிப்பவர்க்கெல்லாம் மரணவேதனை வருமே; இப்போது தங்கட்கு என்ன தண்டனை? யார் விதிப்பது?" என்றாள். மன்னன் கேட்டு உள்ளம் உருகினான்; அவள் உரையிலிருந்த உண்மையை யுணர்ந்தான். தன் அறியாமைக்கு வருந்தினான். உடனே அவளைத் தேற்றி மகாலிங்கத்தை யழைத்து மன்னிப்பு கேட்டுக்கொண்டான். இருவருக்குந் தனக்குவியலையும், மாடமாளிகையையும் பரிசாக நல்கினான்; ஆதரவு செய்தான். "அம்மா! நீ எனக்குத் தங்கை. இன்றுமுதல் அடிக்கடி நீங்கள் இருவரும் அரண்மனைக்கு வரவும் போகவும் இருங்கள்" என்றான். மகாலிங்கம் மன்னனால் மதிக்கப்பட்டு மரண தண்டனையினின்றும் மதியின் மாட்சிமையால் விடுவித்துக் காப்பாற்றிய தன் அருமை மனைவியுடன் மயிலேறும் மாணிக்கத்தை மறவாமல் புனித வாழ்க்கையில் சகல செல்வங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழ்ந்தான்.

உ

முருகா

# எண்ணம் ஈடேறமாட்டாது.

மெய்யன்பர்களே !

நாம் எண்ணிய எண்ணப்படி எதனையும் செய்துவிட முடியாது ; எல்லாம் இறைவன் ஆணையின் வண்ணமே நடக்கும்.

> அவையே தானேயாய் இருவினையில்
> போக்குவரவு புரிய ஆணையின்
> நீக்கம் இன்றி நிற்கும் அன்றே. —சிவஞானபோதம்.

மனிதன் எண்ணியதை எண்ணியவாறு முடிப்பானானால் கீழ் மேலிராது. வாயுதேவன் ஒரு துரும்பைக்கூட அசைக்க முடியாமல் வாடியதும், அக்கினி தேவன் அத்துரும்பை எரிக்கமுடியாது இளைத்ததும் இந்திரன் அசைவற்று அலக்கணுற்றதும் கேனோபநிடதத்தால் புலனாகின்றதன்றோ ?

எல்லாந் தன்னாலேயே ஆகின்றன என்று எண்ணி இறுமாந்து சிலர் திரிகின்றனர். இதனை முடிக்கவேண்டும், இதனை ஈட்டவேண்டும் என்று பலகாலும் முயன்று நிற்பினும் அவை முடியாமல் போகின்றன. சில விஷயங்களில் முயற்சியின்றி வாளா விருப்பினும் அவை வந்து முன்னே நிற்கின்றன. தேடிக்கொண்டு போகும் பொருள் கிடையாமல் திகைப்பதும், தேடாத பொருள் தெருவில் வந்து கிடைப்பதும் கண்கூடு.

> வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
> தொகுத் தார்க்குந் துய்த்த லரிது

என்றார் பொய்யிற்புலவர். ஆதலினால் "இதை இப்படி முடிக்கவேண்டும், அதை அப்படி முடிக்கவேண்டும்" என்று மனக்கோட்டை கட்டக்கூடாது. திருவருளை முன்னிட்டு எதனையுஞ் செய்தல் வேண்டும். இறைவனுடைய இன்னருள் துணைசெய்து முடித்துக் கொடுக்கும். இவ்வுண்மையை அடியிற்காணும் எடுத்துக்காட்டால் கண்டு தெளிமின.

கரிய நிறமும் பெரிய திறமும் திரண்ட புயமும் இருண்ட மனமும் மருண்ட சினமும் உடைய ஒரு வேடன் இருந்தான். அவ்வேடன் ஒருநாள் காட்டை வளைத்து வேட்டையாடி இங்குமங்கும் திரிந்தான். அவ்வாறு திரியுங்காலை ஒரு பெரிய மதயானையைக் கண்டான். அதனைக் கணையால் எய்துக் கொல்லும்பொருட்டு ஒரு புற்றில் மறைந்து நின்றான். யானை அருகில் வந்ததும் கணை தொடுத்துக் கொன்றான். யானை வீழ்ந்து

மாய்ந்தது. அதுசமயம் அவன் காலடியில் மிதியுற்று சோர்ந்த ஒரு நாகம் சீறி அவனைக் கடித்தது. அதனால் வருந்திய வேடன் வெகுண்டு அப்பாம்பையும் ஒரு பாணத்தால் கொன்றான். சிறிது நேரத்திற்குள் விடந் தலைக்கேறி வேடன் இறந்தான்.

இங்ஙனம் யானை, வேடன், பாம்பு மூன்றும் இறந்து கிடந்தன. அங்கு நரியொன்று வந்து சேர்ந்தது. பசியால் வாடி இரையை நாடி வந்த அந்த நரி இறந்து கிடந்த மூன்று பிணங்களையும் கண்டு "நமக்கு நல்ல உணவு கிடைத்தது" என்று உள்ளம் மகிழ்ந்தது. "ஆகா! என்ன அதிர்ஷ்டம்? என்னைப் போல் கொடுத்து வைத்தவர்கள் யார்? உலகில் ஒருவனுக்கு ஏதாவது சிறந்த பொருள் கிடைத்தால் 'நரிமுகத்தில் விழித்தனையோ' என்பர். இப்போது நாம் யார் முகத்தில் விழித்தோம என்று கூறுவது? எவ்வளவு பெரிய பாக்கியங் கிடைத்தது? என் வயிறு செய்த புண்ணியந்தான் யாதோ?" என்று எண்ணி அளப்பற்ற ஆனந்தமுற்று ஆடிப்பாடியது.

பின்னர் நரி அம்மூன்று பொருள்களையுஞ் சுற்றிச் சுற்றிப் பார்த்து "இந்த யானை ஆறு மாதங்களுக்கும், இந்த மனிதன் 8 நாட்களுக்கும், இந்த நாகம் 2 நாட்களுக்கும் உணவாகும். எனவே 185 நாட்களுக்கு உணவைப்பற்றி எனக்குக் கவலையே இல்லை. வெகு சுகமாகத் தின்றுகொண்டிருக்கலாம். ஆனால் இந்த வேடன் கையிலுள்ள வில்லின் நாணை முதலில் கடித்துத் தின்போம். அது ஒரு பாதி வயிற்றுக்கு உணவாகும். அதைத் தான் ஏன் விட்டுவிடவேண்டும்"? என்று எண்ணியது. அதற்கிருந்த மகிழ்ச்சிக்கு வரம்பே இல்லை. ஒரு குதி குதித்தது; ஓடி வேடன் கையிலிருந்த வில்லின் நாணைக் கடித்தது. கடித்தலும் வில் முனை விரைவில் நிமிர நரியின் தலை நறுக்குண்டு விழுந்தது. நரி தான் எண்ணிய எண்ணமெல்லாம் அடிமாண்டு இறந்தது.

ஆதலினால் நமது எண்ணம் எண்ணியபடியே நடேறமாட்டாது. எல்லாம் திருவருளாலே நிகழும்.

கரியொரு திங்களாறும் காளவன் மூன்று நாளும்
இரிதலைப் புற்று நாகம் இரண்டு நாள் இரையாமென்றே
வரிதலை வேடன் கையின் விற்குதை நரம்பைக் கவ்வி
[illegible]ட்டபாடு நாளை நாம் படவே நிற்போம்.

தாரண ஞு ஐப்பசி மீ 7ம் நாள் திங்கள் (23-10-44)
உயர்திரு. ராவ்பகதூர் P. ரெங்கசாமி நாயுடு அவர்கள் B.A., B.L., நகர் மன்றத் தலைவர், தலைமையில்,

தெய்வயானை வள்ளியம்மையார் திருமணம்.

ஷ நாட்களில் தினந்தோறும் சபையில் காலை 8 மணிக்கு வழிபாடு நடைபெறும். ஷ விரிவுரைகள் மேலை ஆடி வீதியில் மாலை 7-15 மணிக்கு நடைபெறும்.

ஆறுபடை வீட்டுப் படம் முதலியன விரிவுரை நேரங்களில் விலைக்குக் கிடைக்கும்.

---

## பிரிவாற்றுமை.

1. எமது ஆருயிர் நண்பரும், அறநெறிச் செல்வரும், உத்தமகுணசீலரும் ஆகிய, ரெவினியூ இன்ஸ்பெக்டர், திருவாளர் **S.** ராமசாமிப் பிள்ளை யவர்கள் மணப்பாறையில் மயூரவாகனன் மலரடி சேர்ந்தது குறித்துப் பெரிதும் வருந்துகிறோம். அவருடைய ஆன்மா சாந்தியடைக.

2. பொதுநல உழைப்பாளரும், முருகவேள் திருவடியில் சிறந்த அன்புடையவரும், எமக்கு வெளியே உலாவும் உயிர் போன்றவரும், தளராத உறுதியும் ஊக்கமுமுடையவருமாகிய, தஞ்சை திருவாளர் **M.** குஞ்சிதபாதம் பிள்ளையவர்கள் திருவேலிறைவன் திருவடி சேர்ந்தது குறித்து உள்ளம் உருகுகின்றது. அவருடைய ஆன்மா சாந்தியடைக.

ஆசிரியர், தி. அ.

## மதிப்புரை.

இறைவனுகிய தலைவனிடம் ஆன்மாவாகிய தலைவி தன் பிரிவாற்றுமையைப் புகலும் பொருட்டு தூது அனுப்புவது மரபு. அங்ஙனம் எழுந்த நூல்களும் பல; மேகவிடுதூது, வண்டுவிடுதூது, மயில்விடுதூது முதலியன. அன்புவிடு தூது என்று இன்று ஒன்று வெளிப்படுகின்றது. அன்புமயமாகிய ஆண்டவனிடம் அன்பைத் தூதாக அனுப்பிய பெருந்தகையாவர் எனின்; புதுவை உயர்திரு. **P. N.** ராஜமாணிக்கம் பிள்ளை யவர்கள்.

இவர்கள் **அன்புவிடு தூது** என்னும் அரிய செந்தமிழ்ப் பிரபந்தத்தைப் பாடினார்கள். அது படிக்குந்தொறும் இன்பம் பயக்குகின்றது. அன்பு ததும்புகின்றது. இதனை அன்பர்கள் அனைவரும் படித்து மகிழ்வார்களாக.

இந்நூல் கிடைக்குமிடம் :—

பி. என். ராஜமாணிக்கம் பிள்ளை,
43, டூப்ளேக்ஸ் தெரு, பாண்டிச்சேரி.

உயர்ந்த வேலைப்பாட்டுக்குக் காரண்டி
அசல் வெள்ளிசாமான்களும், வெள்ளி நகைகளும்
உத்திரவாதத்துடன் கிடைக்கும் இடம்.

**வ. ரு. புருஷோத்தம செட்டியார்**

தங்கம், வெள்ளி நகை வர்த்தகம்

(பூஜைக்குகந்த வெள்ளி உருவப் படங்களும் கிடைக்கும்.
நெ. 47 சைனாபஜார் ரோட்டு, சௌகார்பேட்டை, மதராஸ்)

---

**வெகு சரசம்!    உத்திரவாதம்!!**

எங்கள் சொந்த தரியில் தயார் செய்யும்

**பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை,**
**பட்டு-சேலை தினுசுகள்**
**சாயத்திற்கும் ஜரிகைக்கும்**

உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.

வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்

**எஸ். ஆர். ஆதிநாராயண முதலியார்,**
**எஸ். எஸ். சம்பந்தமூர்த்தி முதலியார்.**

பட்டுஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பிதெரு, சின்னகாஞ்சிபுரம்.

---

நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.




சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54 பந்தர்தெரு, மதராஸ்.

---

Edited by Thirumuruga KIRUPANANDAVARI; Printed & Published by M. MADHUSOODANA SIVAM, at the THIRUPPUGAL AMIRTHAM PRESS, Kangayanellur, Via Katpadi. N. A.